ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகு பிடிப்போர் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 54/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

பிற்பகல் 13-0

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1992), மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/1992)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்காகக் கொண்டுவரப் பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவு மீதான விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக் கையாக்கி என் உரையைத் துவங்குகிறேன்.

தமிழகத்தில் உள்ள கிராமப்புற, நகர்ப்புற ஏழை, எளிய நடுத்தர மக்களின் ஒரே பொழுதுபோக்கு சினிமா என்று சொன்னால் அது மிகையாகாது. இன்று தமிழகத்தில் உள்ள பல சினிமா தியேட்டர்களில் தியேட்டர் உரிமையாளர் கள் அரசுக்குச் சேர வேண்டிய கேளிக்கை வரியைச் செலுத் தாமல் எப்படியெல்லாம் அரசை ஏமாற்ற முடியுமோ அவ் வாறெல்லாம் அரசை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சினிமாவுக்குச் செல்பவர்களுக்கு பல தியேட்டர்காரர்கள் டிக் கட் தராமல் 15 ரூபாய், 10 ரூபாய் என்று அடையாள டோக்கன்களைக் கொடுத்து பொதுமக்களை உள்ளே அனுமதிக் கின்றார்கள். குறைந்த கட்டணத்தில் சினிமா பார்க்க தியேட் டருக்கு வருபவர்கள் முழுக்க முழுக்க ஏமாற்றப்பட்டு 10 ரூபாய் இருந்தால்தான் சினிமா பார்க்க முடியும் என்று சொல்லி அவர்களை 10 ரூபாய் டோக்கன் வாங்க வற்புறுத்து கிறார்கள். இதனால், அரசுக்கு வரவேண்டிய கேளிக்கை வரி கோடிக்கணக்கில் வரி ஏய்ப்பு என்ற போர்வையில் வராமல் போய்விடுகிறது. நிதி நெருக்கடியால் கஷ்டப்படும் இந்த அரசு கேளிக்கை வரி ஏய்ப்பைத் தடுக்க தகுந்த சட்ட திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று பணிவோடு இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் நகராட்சிக்கு இவ்வாண்டு தொடக்கத்தில் முதல் மூன்று மாதங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராம சுந்தரம், பயிற்சி உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. உமாசங்கர் போன்றவர்களிடம் நான் மனு கொடுத்து, அடிக்கடி சோதனையிட்டு 17 இலட்சம் ரூபாய் நகராட்சிக்கு வருவாய் கேளிக்கை வரியாக வந்தது. அடுத்து வந்த 3 மாதங்களில் சோதனைகள் நடைபெறாததால் நகராட்சிக்கு

@24—9—1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

7 இலட்சம் ரூபாயாக வருவாய் குறைந்தது. வணிக வரித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தியேட்டர் உரிமையாளர் களோடு சேர்ந்துகொண்டு சதி செய்து, சோதனைக்கே போவதில்லை. போனாலும், தனி அறையில் அமர்ந்து, தனியாகப் பேசி, மாமூல் பெற்றுக்கொண்டு, தியேட்டர் களை சோதனையிடாமல் வந்துவிடுகின்றனர். இதனால் நகராட்சிக்கு வரவேண்டிய பேரூராட்சி, ஊராட்சிகளுக்கு வர வேண்டிய கேளிக்கை வரி வருவாய் போவதோடு, அரசாங் கத்திற்கும் பெரிய அளவில் கோடிக் கணக்கில் கேளிக்கை வரி வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே, அவ்வப்போது சினிமா தியேட்டர்களைச் சென்று சோதனையிட முனிசிபல் கமிஷனர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், பில் என்ன? வட ஆற்காடு மாவட்டம் பற்றி அதிலே வரவில்லை.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவாய் ஈட்டித் தருகின்ற வழிமுறைகளைச் சொல் கிறேன். அவ்வப்போது சினிமா தியேட்டர்களைச் சென்று சோதனையிட முனிசிபல் கமிஷனர், பேரூராட்சி நிர்வாக அலுவலர், தாசில்தார், வணிகவரி அதிகாரிகள், ஆர்.டி.ஓ. போன்றோர் இணைந்து சோதனையிட சட்டத்தில் வழிவகை செய்யவேண்டும். தனிப்பட்ட முறையில் சோதனையிட்டு வரி ஏய்ப்பு இருக்குமிடத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க சட்டதிருத்தத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணிகவரி அதிகாரிகள் தியேட்டர் உரிமை யாளர்களோடு சேர்ந்து மோசடியில் ஈடுபட்டு வரி ஏய்ப்புக்கு துணை போகிறவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சினிமாக் கட்டணம் சமீபத்தில் உயர்த்தப்பட்டுள்ளதால் ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அதை மறுபரிசீலனை செய்து சினிமாக் கட்டணத்தை குறைப் பார்களானால் ஏழை எளியவர்களின் உள்ளம் வாழ்த்தும் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று முடிக் கிறேன் நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

பிற்பகல் 1—35

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் தவறுகள் நடப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி திரையரங்குகளில் தவறுகள் நடக்காமல், அரசு

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்[ ]1992 செப்டம்பர் 25

வரிப்பணம் ஏமாற்றப்படாமல் பார்த்துக்கொள்வதற்கு இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1992). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடை செய்தல்) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1992)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' எனக்கோருகிறேன்.

தலைவர் அவர்களே, கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக கட்டாய நன்கொடை வசூலிக்கிற பழக்கம் மாநிலத்தில் மிகவும் பரவலாக இருந்து வருகிறது. விரும்பத் தகாத இந்தப் பழக்கமானது கல்வி கற்பிப்பதில் வணிகத் தன்மையை உருவாக்க உதவுகிறது என்பதோடு, கல்வித் தரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும்

@21-9-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வளியிடப்பெற்றுள்ளது.